2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 15.4.2026 அன்று, ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, வாசுதேவநல்லூர், திருவில்லிபுத்தூர், சாத்தூர், விருதுநகர், திருமங்கலம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு :

ஓட்டப்பிடாரம் தேரடி சந்திப்புப் பகுதியில், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் பி.எம்.ராமஜெயம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

கோவில்பட்டி கயத்தாறு பிரதான சாலை பகுதியில், கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கா.கருணாநிதி அவர்களை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

புளியங்குடி காமராஜர் சிலை பகுதியில், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் ஈ.ராஜா அவர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.

இராஜபாளையம் ஜவகர் மைதானம் பகுதியில், ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் எஸ்.தங்கபாண்டியன் அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் தேரடி வீதி பகுதியில், திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் பி.மகாலிங்கம் அவர்களுக்கு, கதிர் அரிவாள் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

சாத்தூர் ஆலங்குளம் சாலை பகுதியில், சாத்தூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அ.கடற்கரை ராஜ் அவர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டார்.

விருதுநகர் எம்.ஜி.ஆர். சிலை பகுதியில், விருதுநகர் சட்டமன்றத் தொகுதியின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் வேட்பாளர் வி.விஜயபிரபாகர் அவர்களுக்கு, கொட்டு முரசு சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார்.

திருமங்கலம் முத்துராமலிங்க தேவர் சிலை பகுதியில், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் மு.மணிமாறன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.